விவசாயிகளுக்கெல்லாம் வித்துக்கள் சப்ளை செய்யப்படுகிறதா? இப்போது சப்ளை செய்வதைவிட இன்னும் அதிகமான அளவில் பல பகுதிகளிலும் சப்ளை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இப்போது பருத்தி சாகுபடிக்கேற்றவகையில், சாகுபடித் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு, திருநெல்வேலியில் 1 லட்சத்து 35 ஆயிரம் சொச்சம் ஏக்கர்களிலும், கோவை மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கர்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறையில் 50 ஆயிரம் ஏக்கர்களிலும் முன்னோடித் திட்டமாக, விரைவுத் திட்டமாகச் செயல்படுத்த அரசாங்கம் முன் வந்திருக்கிறது. இப்போது வேலைகள் தொடங்கியிருக்கின்றன.

Building for Namakkal Primary Health Centre.

* 86 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether the construction of building for the Primary Health Centre at Namakkal in Salem District is to be undertaken shortly; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மொத்தம் நமது மாநிலத்திலுள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்களில் எத்தனை பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குக் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டிருக்கிறது? இன்னும் எத்தனை சென்டர்களுக்குக் கட்டடம் கட்டித் தர வேண்டும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே இந்தக் கேள்வியைத் தனிக் கேள்வியாகக் கேட்டிருக்க வேண்டும். நமது மாநிலத்தில் இருக்கிற ஏறத்தாழ 374 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, மூன்றிலொரு பங்கு இடங்களுக்குத்தான் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. மற்றவை, பஞ்சாயத்து யூனியனால் வழங்கப்பட்டிருக்கிற இடங்களிலும், சில சென்டர்கள் வாடகைக் கட்டடங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, கட்டடம் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உடனடியாக கட்டடம் கட்டுவதற்காக "பேஸ்டு புரோக்ராம்" திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகவே தொடர்ந்து ஆண்டு ஒன்றுக்கு 10, 20 என்ற அளவில் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டிலே 20, 30 இடங்களிலே கட்டடம் கட்டுவதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்காக பஞ்சாயத்து யூனியன் ஒரு ஊரைத் தேர்ந்தெடுத்து அதற்காக 5 ஏக்கர் நிலமும் தந்து 10 ஆயிரம் ரூபாய் நிதியும் முன்தொகையாக கட்ட முன்வர வேண்டும். நாமக்கல் ஒன்றியத்தில் முன்தொகை இன்னும் கட்டப் படவில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை உச்சிப் பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நாம் இன்னும் நிலத்திலே இருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலை உச்சிக்குப் போகிறார். அதைப்பற்றிப் பின்னர்தான் கவனிக்கவேண்டும்.

Homeopathic Colleges.

* 87 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether there is any proposal to start Homeopathic Colleges in this State; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஓமியோபதி கல்லூரியை ஆரம்பிப்பதற்கான நிலைமை, ஓமியோபதி முறையை இந்த அரசு ஏற்றுக்கொண்டது என்பதற்கான சட்டம் இன்னும் கொண்டு வராததால், அதை நடைமுறைப்படுத்துவதற்கு வழி இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, ஓமியோபதி கல்லூரியை அமைத்து, ஓமியோபதி முறையை உற்சாகப்படுத்துவது, இப்போது ஏற்கெனவே ஓமியோபதி முறையில் டிப்ளமா வாங்கிக்கொண்டிருப்பவர்களை ரெகுலரைஸ் பண்ணுவது போன்ற காரியங்களுக்காக ஏதாவது மசோதாவைக் கொண்டு வருவதற்கு இந்த அரசுக்கு நோக்கம் உண்டா? அப்படியானால், இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரில் மசோதா கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஓமியோபதி, சித்தவைத்தியம், ஆயுர்வேதம், யுனானி வைத்திய முறைகளைச் சட்டபூர்வமாக்குவதற்காக சட்டம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு, இடையில் இந்திய அரசு வேறு ஆலோசனைகளைச் சொன்ன காரணத்தினால் அது கைவிடப்பட்டது. ஓராண்டுக்கு முன்னாலே ஓமியோபதி முறையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டது என்பதற்கான மசோதா கொண்டுவரப்பட்டு, சட்டமன்றம் கலைக்கப்பட்ட காரணத்தால், அந்த மசோதா